# 7

# நீங்கள் தவறாக நடத்தப்படும் போது

## (மத்தேயு 5:38-42)

*மத்தேயு 5:38-42 என்ற வசனப் பகுதியானது மலைப்பிரசங்கத்தில் நமது அடுத்த பாடப் பகுதியாக உள்ளது, இதில் இயேசுவின் உரையைக் கேட்டவர்கள் கேள்விப்பட்டிருந்தவற்றிற்கும் அவர் போதித்தவற்றிற்கும்இடையில் உள்ள நேர்மாறின் கடைசிக்கு முந்திய பகுதி அடங்கியுள்ளது.இந்தநேர்மாறும் கடைசி நேர்மாறும் நெருங்கிய தொடர்புடையவையாக உள்ளன; இவ்விரண்டுமே, நாம் தவறாக நடத்தப் படுகையில் நாம் எவ்வாறு பதில்செயல் செய்ய வேண்டும் என்பதைப் பற்றியவையாக உள்ளன.*[1] *இந்தப் பாடத்திற்கான வேதவசனப் பகுதியானது மலைப்பிரசங்கத்தின் மற்ற எந்தப்பகுதியையும் போலவே அதிகமான விவாதத்திற்குக்காரணமாகி இருக்கிறது.*

> "கண்ணுக்குக் கண், பல்லுக்குப் பல் என்று, உரைக்கப்பட்டதைக் கேள்விப்பட்டிருக்கிறீர்கள். நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்; தீமையோடு எதிர்த்து நிற்கவேண்டாம்; ஒருவன் உன்னை வலது கன்னத்தில் அறைந்தால், அவனுக்கு மறுகன்னத்தையும் திருப்பிக்கொடு. உன்னோடு வழக்காடி உன் வஸ்திரத்தை எடுத்துக்கொள்ளவேண்டுமென்றிருக்கிறவனுக்கு உன் அங்கியையும் விட்டுவிடு. ஒருவன் உன்னை ஒரு மைல் தூரம்வரப் பலவந்தம்பண்ணினால், அவனோடு இரண்டுமைல் தூரம் போ. உன்னிடத்தில் கேட்கிறவனுக்குக் கொடு, உன்னிடத்தில் கடன்வாங்க விரும்புகிறவனுக்கு முகங்கோணாதே" (மத்தேயு 5:38-42).

*டி. மார்டின் லாயிட்-ஜோன்ஸ் அவர்கள், "தீமையை எதிர்த்து நிற்காதீர்கள் மற்றும் அன்புடனும் மன்னித்தலுடனும் இருங்கள் என்று நமக்குக் கூறுகிற இந்தப் போதனையைப் போன்று, வேத வசனத்தின் வேறு எந்த வசனப் பகுதியும், சாத்தியமான வகையில் அதிகமான எழுச்சியை உண்டாக்கி இருக்கவில்லை" என்று எழுதினார்.*[2] *இவ்வசனப் பகுதியானது, இயேசுவின் போதனை முட்டாள்தனமானது அல்லது சாத்தியமற்றது என்று கூறுவதற்குக் கிறிஸ்தவத்தின் விரோதிகளால் பயன்படுத்தப் பட்டுள்ளது. இது இயேசுவைப் பின்பற்றப் பிரியமாயிருப்பவர்களைத் திகைக்கச் செய்கிற ஒரு பகுதியாகவும் இருக்கிறது. இது நமது வாழ்வில் மிகச் சரியாக எவ்வாறு நடைமுறைப் படுத்தப்படக் கூடும்? கிறிஸ்தவர்களாக விரும்புகிற பலர், ஒன்று இவ்வசனப் பகுதியின் அறிவுறுத்தல்களைக்காணாது விடுகின்றனர் அல்லது அவற்றைப் புறம்பே விளக்கப்படுத்துவதில் முடிகின்றனர். இந்தப் போதனையை*

*அகற்றிப்போடாமல் நடைமுறைப்படுத்துதல் என்பதே எனது அறைகூவலாக உள்ளது.*

*இந்தப் பாடத்தை நான், "நீங்கள் தவறாக நடத்தப்படும்போது" என்று அழைக்கிறேன். தேவனுடைய பிள்ளையாக இருப்பவர் மற்றவர்களால் தவறாக நடத்தப்படும்போது எவ்வாறு எதிர்ச் செயல் செய்ய வேண்டும்? இந்தப் பாடத்தில் நாம், அந்தக் கேள்விக்கு இயேசுவின் எதிர்மறையான பதிலை (என்ன செய்யக் கூடாது என்பது பற்றிய பதிலை) முதன்மையாகக் காண்போம். அடுத்த பாடத்தில் நாம், அவரது நேர்மறையான பதிலை (என்ன செய்ய வேண்டும் என்பது பற்றிய பதிலை) படிப்போம்.*

## அவர்களுக்குப் போதிக்கப்பட்டிருந்தது என்ன (5:38)

*முதலில் இயேசு, தமது உரையைக்கேட்டவர்களுக்குப் போதிக்கப் பட்டிருந்தது என்ன என்பதைக் குறிப்பிட்டார்: "கண்ணுக்குக் கண், பல்லுக்குப் பல் என்று, உரைக்கப்பட்டதைக் கேள்விப்பட்டிருக்கிறீர்கள்" (வசனம் 38). வேதாகமத்தைப் பற்றி நன்கு அறியாதவர்களில் பெரும்பான்மையானவர்களுக்குக் கூட, இந்தப் பழைய ஏற்பாட்டு போதனை நன்கு பழக்கமானதாக இருந்தது. இவ்வார்த்தைகள் பழைய ஏற்பாட்டில் பின்வரும் மூன்று இடங்களில் காணப்படுகின்றன: யாத்திராகமம் 21:22-25; லேவியராகமம் 24:19, 20; மற்றும் உபாகமம் 19:21. உபாகமம் 19:21ல் பின்வருமாறு வாசிக்கப் படுகிறது: "உன் கண் அவனுக்கு இரங்கவேண்டாம்; ஜீவனுக்கு ஜீவன்,கண்ணுக்குக் கண், பல்லுக்குப் பல், கைக்குக் கை, காலுக்குக் கால் கொடுக்கப்படவேண்டும்."*

**இந்தக் கட்டளை கொடுக்கப்பட்டது ஏன்?**

*இவ்வார்த்தைகள், தனிப்பட்ட வகையில் பழிவாங்குதலில் இருந்து குடும்ப விரோதங்கள் மற்றும் குடியுரிமைக் கீழ்ப்படிதல் வரையில் ஒவ்வொன்றிற்கும் சாக்குப் போக்கு சொல்லப் பயன்படுத்தப் பட்டுள்ளன. தேவன் இதற்காகவே இந்தக் கட்டளையைக் கொடுத்தாரா? இல்லவே இல்லை. இந்த அறிவுறுத்துதலைப் பொறுத்த மட்டில், பல உண்மைகள் புரிந்துகொள்ளப்பட வேண்டும். முதலாவதாக,இந்தக் கட்டளை எதிர்த்துத் தாக்குதலை ஊக்குவிக்க அல்ல, ஆனால் (ஜாக்கிரதையாகக் கவனியுங்கள்)* தண்டனையை மட்டுப் படுத்துவதற்காகவே தரப்பட்டது*. இந்த ஆணைக்கு முன்னர், யாரேனும் ஒருவர் (சண்டையில்) ஒரு கண்ணை இழந்தார் என்றால், அவர் பெரும்பாலும் தன்னைத் தாக்கியவரின் இரு கண்களையும் கெடுக்கவோ அல்லது உயிரை வாங்கவோ முயற்சி செய்தார். தனிப்பட்ட வகையில் எதிர்த்துத் தாக்குதல் என்பது அடிக்கடி, முழுக்குடும்பங்களை அல்லது நகரங்களை அல்லது நாடுகளை அழித்தலை உள்ளடக்குதல் என்பதைத் தீவிரப்படுத்தும். கண்ணுக்கு கண் என்ற கட்டளையைப் பற்றி நீங்கள் நினைக்கும்போது, அதைப் பற்றி பின்வருமாறு சிந்தியுங்கள்: "ஒரு கண்ணுக்கு ஒரு கண், மாத்திரமே, மற்றும் ஒரு பல்லுக்கு ஒரு பல் மாத்திரமே -* மற்றும் அதிகமானதல்ல.*"*

*இவ்வசனங்கள் சராசரி யூதர்களை நோக்கி இலக்கு வைக்கப்படவில்லை, ஆனால் அதிகாரம் பெற்ற நியாயாதிபதிகளுக்கு ஒரு வழிகாட்டுதலாக இருத்தலையே நோக்கங் கொண்டிருந்தது. சற்று முன் நாம் உபாகமம் 19:21ஐ வாசித்தோம்.சந்தர்ப்பப் பொருளைக் காண்பதற்குப் பல*

வசனங்கள் பின்னால் வாருங்கள். 17ம் வசனமானது, வழக்காடுகிற இரு மனிதர்களைப் பற்றிக் குறிப்பிடுகிறது. அவர்கள் "இருவரும் கர்த்தருடைய சந்நிதியில் அக்காலத்தில் இருக்கும் ஆசாரியர்களுக்கும் நியாயாதிபதிகளுக்கும் முன்பாக வந்து நிற்பார்களாக" என்று கூறப்பட்டனர். 18ம் வசனம் "அப்பொழுது நியாயாதிபதிகள் நன்றாய் விசாரணைசெய்யக்கடவர்கள்'' என்று கூறுகிறது. பின்தொடரும் வசனங்கள், அவர்கள் நீதியை எவ்வாறு நிலைநாட்ட வேண்டும் என்பதற்கான அறிவுறுத்துதல்களைக் கொடுக்கிறது. "கண்ணுக்கு கண், பல்லுக்குப் பல்'' என்பது பற்றிய பொதுக் கட்டளையானது அந்த அறிவுறுத்துதல்களின் ஒரு பகுதியாக உள்ளது. அடிப்படை நீதிசார்ந்த வகையில் எல்லாரும் ஒத்துக்கொள்ளும் மூதுரையே இங்கு கொள்கையாக உள்ளது: தண்டனையானது குற்றத்திற்குப் பொருத்தமானதாக இருக்கட்டும்.

கண்/பல் கட்டளையானது எப்போதாவது நேரடியாகச் செயல்படுத்தப் பட்டதா இல்லையா என்பது பற்றி நமக்கு உறுதியாக எதுவும் தெரிவதில்லை. இயேசுவின் காலத்தில், காயப்பட்டவர்[3] மீது பொதுவாக அப்போதைய மதிப்பீடு இடப்பட்டது (கண்ணா, பல்லா அல்லது வேறு ஏதாவதுமா). இந்தத் தொகையானது (இன்றைய நாட்களில் பெரும்பான்மையான நீதிமன்றங்களில் நடப்பது போலவே) குற்றம் செய்தவரால் செலுத்தப்பட வேண்டியிருந்தது.

**இந்தக் கட்டளை எவ்வாறு தவறாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது?**

ஆகையால்,கண்ணுக்கு கண் பற்றிய நியாயப்பிரமாணம் "அனுமதிக்கும் விஷயம்என்பதற்கு மாறாக கட்டுப்படுத்தும் விஷயமாகவே'' இருந்தது.[4] மோசேயின் நியாயப்பிரமாணம் உண்மையில் தனிப்பட்ட வகையில் பழிவாங்குதலை ஊக்கப்படுத்தவில்லை. நம்மில் பெரும்பான்மையானவர்கள் லேவியராகமம் 19:18ன் பின்வரும் வார்த்தைகளுக்கு நன்கு பழக்கமானவர்களாக இருக்கிறோம்: ''பழிக்குப் பழி வாங்காமலும், உன் ஜனப்புத்திரர்மேல் பொறாமை கொள்ளாமலும்,'' உன்னில் நீ அன்புகூருவது போல் பிறனிலும் அன்புகூருவாயாக; ஆனால் வசனத்தின் முதல் பாகத்தைக் கவனியுங்கள். இருந்தபோதிலும், தனிப்பட்ட வகையில் எதிர்த்துத் தாக்குதலைத் தேவன் அங்கீகரித்தார் என்று கூறுவதற்கு யூதர்கள், கண் - மற்றும் - பல் பற்றிய வசனப் பகுதியைப் பயன்படுத்தினர்.

இவ்வசனப் பகுதியானது இன்றைய நாட்களிலும் இதைப் போன்றே இன்னமும் தவறாகப் பயன்படுத்தப்படுகிறது. எரியும் கண்கொண்ட வெறியர்கள் மற்றவர்களைத் துன்புறுத்தச் சாய்ந்து, "வேதாகமம் 'கண்ணுக்கு கண், பல்லுக்குப் பல்' என்று ஆரவாரம் செய்கின்றனர்."

## இயேசு போதித்தது என்ன (5:39-42)

**ஒரு சட்டம் (வசனம் 39அ)**

பழைய ஏற்பாட்டு வேதவசனப் பகுதி தவறாகப் பயன் படுத்தப்படுதலுக்கு இயேசு பின்வருமாறு பதில்அளித்தார்: "நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்; தீமையோடு[5] எதிர்த்து நிற்க[6] வேண்டாம்'' (வசனம் 39). தொடக்கத்தில் இருந்தே நாம் பின்வரும் நேர்மாறு குறித்து வலியுறுத்தப் பட்டவர்களாக இருக்கிறோம்: "பொல்லாத நபர் ஒருவரை எதிர்த்து நிற்கக் கூடாதா? பொல்லாத மனிதர்கள்

*தாங்கள் விரும்புகிற எதையும் செய்ய அனுமதிப்பதா? அவர்கள் இந்த உலகத்தில் கொந்தளித்து ஓட அனுமதிப்பதா? அது சரியானதாக ஒலிப்பதில்லையே!" நாம் உடனடியாக இயேசுவின் வார்த்தைகளினால் அவரைப் பலவீனப் படுத்தாமல் தகுதிப்படுத்தும் அச்சுறுத்துகிற பணிப்பொறுப்பினால் எதிர்கொள்ளப் பட்டிருக்கிறோம்.*

*இயேசு பொதுவாகச் சமூகத்திற்கல்ல ஆனால் தனித்தனி சீஷர்களுக்கு இதை உரைத்துக் கொண்டிருந்தார் என்பது ஒருவேளை நான் கூறத்தேவையான முதல் விஷயமாக இருக்கலாம்.*

- *அவர் பெற்றோர்களின் பிள்ளைகளைப் பற்றி அவர்களிடத்தில் பேசிக்கொண்டிருக்கவில்லை. பிள்ளைக்குள் இருக்கும் பொல்லாத விஷயம் தீவிரமாக எதிர்த்து நிற்கப்பட வேண்டியதாகஇருக்கிறது. (ஒழுங்குபடுத்துவதன் அவசியம் பற்றி எபிரெயர் 12:8, 11ல் காணவும்.)*
- *அவர் குடிமை அரசுகளைத் தமது சிந்தையில் கொண்டிருக்கவில்லை. "தீமைசெய்கிறவன் மேல் கோபாக்கினை வரப்பண்ணும்படி" அரசு அதிகாரிகளுக்குத் தேவன் அதிகாரத்தைக் கொடுத்திருக்கிறார் (ரோமர் 13:4).*
- *அவர் சபைக்குழுங்களுக்கு அறிவுறுத்துதல்களைக் கூட இவ்விடத்தில் கொடுத்துக் கொண்டிருக்கவில்லை.கள்ளப் போதகர்கள் சகித்துக் கொள்ளப் படக்கூடாதவர்களாக இருந்தனர் (காண்க மத்தேயு 7:15). கள்ளப் போதகர் ஒருவரை ஊக்குவிக்கும் எவரும் அவரது "துர்க்கிரியைகளுக்கும் பங்குள்ளவனாகிறார்" (2 யோவான் 11). மேலும் பாவத்தில் தொடர்ந்து நிற்கும் உறுப்பினர்கள் சபையினால் - ஒழுங்குபடுத்தப்பட வேண்டும் (காண்க மத்தேயு 18:15-18).*

*இயேசு, பெற்றோர்களுக்கோ, குடிமை அதிகாரிகளுக்கோ அல்லது சபை நடத்துனர்களுக்கோ ஒரு கட்டளையைஇவ்விடத்தில் தரவில்லை என்றால், அவர் யாருக்குப் பேசிக்கொண்டிருந்தார்?அவர், தனிப்பட்ட சீஷர்கள் என்ற வகையில் நம்மிடத்தில் பேசிக்கொண்டிருந்தார். நாம் தனிப்பட்ட வகையில் தவறாக நடத்தப்படும்போது, நாம் எவ்வாறு பதில்செயல் செய்ய வேண்டும் என்பது பற்றி அவர் அக்கறை உடையவராக இருந்தார்.*

*"தனிப்பட்ட" என்ற வார்த்தையை உங்கள் சிந்தையில் அடிக்கோடிட்டுக் கொள்ளுங்கள். பொல்லாத நபர் ஒருவர் சட்டத்தை மீறினால் அல்லது அவர் தம்மை அல்லது பிறரைப் புண்படுத்தினால் அவரை நாம் எதிர்த்து நிற்கக் கூடாது என்று இயேசு மறைமுகமாக உணர்த்தவில்லை. எடுத்துக்காட்டாக, யாரேனும் ஒருவர் உங்கள் பிள்ளையைப் புண்படுத்த இருந்தால், நீங்கள் சும்மா அமர்ந்து கொண்டு ஒன்றும் செய்யாமல் இருக்க வேண்டும் என்று இயேசு விரும்பமாட்டார். மற்றவர்களின் உரிமைகள் மற்றும் கொள்கைகளின் விஷயங்கள் தொடர்பானவற்றில் நாம் தீமையை எதிர்த்து நிற்க வேண்டியவர்களாக இருக்கிறோம்.*

*இயேசு தாமே, தீமையையும் பொல்லா மக்களையும் எதிர்த்து நின்றார். இரு சந்தர்ப்பங்களில் அவர், தேவாலயத்தைத் தீட்டுப்படுத்தியவர்களை அங்கிருந்து துரத்தினார் (காண்க யோவான் 2:13-17; மத்தேயு 21:12, 13). அவர்*

*பொல்லாத மனிதர்களின் மாய்மாலத்தைக் கண்டனம் செய்தார் (மத்தேயு 23). அப்போஸ்தலரான பவுலும் கூட தீமையையும் பொல்லா மனிதர்களையும் எதிர்த்து நின்றார்.[7] ஒரு சந்தர்ப்பத்தில் பேதுரு தவறு செய்தபோது அவரைப் பவுல், "முகமுகமாய் அவனோடே எதிர்த்து நின்றார்" (கலாத்தியர் 2:11). இதில் "எதிர்த்து" என்ற வார்த்தையானது நமது வேதபாட வசனப் பகுதியில் "எதிர்த்து" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள அதே கிரேக்க வார்த்தையில் இருந்துவந்துள்ளது. இருப்பினும், இயேசுவும் பவுலும் தனிப்பட்ட வகையில் தவறாக நடத்தப்பட்டனர் என்ற உண்மையில் அவர்கள் அமைதியற்றுப் போனதால் அல்ல, ஆனால் கொள்கை விஷயமாகவே அவர்கள் தீமையையும் பொல்லாத மனிதர்களையும் எதிர்த்து நின்றனர்.*

*இயேசு தாமே கொடுத்த உதாரணங்களில், அவர் தமது சிந்தையில் கொண்டிருந்தது என்ன என்பது பற்றிய மிகச்சிறந்த விளக்கம் காணப்படலாம்: மறுகன்னத்தைக் காட்டுதல், அங்கியைக் கொடுத்தல், இரண்டாவது மைல் தூரமும் செல்லுதல்.[8] இந்த உதாரணங்களில் எதுவும் உயிருக்கு அச்சுறுத்தல் ஏற்படுத்துவதாக இருப்பதில்லை - ஆனால் இவையாவும் மிகவும் தனிப்பட்டவையாகவும், நமது "உரிமைகள்" என்று நாம் நினைப்பவற்றை மீறுபவையாகவும் உள்ளன - என்பதைக் கவனியுங்கள்.*

***நான்கு உதாரணங்கள் (வசனங்கள் 39ஆ-42)***

*உதாரணங்களைப் பற்றி நாம் ஆழ்ந்து சிந்திக்கையில், அவற்றிற்குப் பின்னால் உள்ள கொள்கைகளை நாம் தேடுவோம். சிலர், இயேசுவின் அறிவுறுத்துதல்களை, ஒரு கிறிஸ்தவர் எவ்வாறு செயல்பட வேண்டும் என்பதற்கான சரிபார்ப்புப் பட்டியலில் உள்ள விஷயங்கள் என்பதாக மாத்திரம் எடுத்துக் கொள்கின்றனர். இருப்பினும் அறுபது ஆண்டுகள் ஒரு கிறிஸ்தவனாக வாழ்ந்துள்ள எனது வலது கன்னத்தில் ஒருக்காலும் அறைவாங்கியதில்லை, எவரொருவரும் எனது வஸ்திரத்தை எடுத்துக்கொள்ள வேண்டும் என்று என்னிடத்தில் வழக்காடியதில்லை மற்றும் எவரொருவரும் என்னை ஒரு மைல் தூரம் வரப் பலவந்தம் பண்ணியதில்லை. இந்தக் கட்டளைகளுக்குப் பின்னால் பொதுவான கொள்கை எதுவும் இல்லை என்றால் ,அவைகள் எனது அன்றாட வாழ்வில் கொஞ்சமே நடைமுறைப் பயன்பாடு உள்ளவையாக இருக்கும். இயேசு கொடுத்த உதாரணங்கள் "கண்மூடித்தனமாகக் கடைப்பிடிக்கப்பட வேண்டிய" சட்டங்களாக இருப்பதில்லை, ஆனால் அதற்கு மாறாக அவைகள் "எப்போதும் பாதுகாக்கப்பட்ட வேண்டிய" ஒரு கொள்கையை உருவாக்கின்றன என்று பி. டபிள்யு. ஜான்சன் அவர்கள் கருத்துத் தெரிவித்தார்.[9] கொள்கை என்ன?*

*(1) "மறுகன்னத்தையும் திருப்பிக்கொடு." 39ம் வசனத்தின் கடைசிப் பகுதியில் முதல் உதாரணம் காணப்படுகிறது: "ஒருவன் உன்னை வலது கன்னத்தில் அறைந்தால், அவனுக்கு மறுகன்னத்தையும் திருப்பிக் கொடு." கன்னத்தில் அறைதல் என்பது ஒரு அவமதிப்பாகவே எப்போதும் கருதப்பட்டுள்ளது.[10] நமது வேதபாட வசனப் பகுதியில் குறிப்பிடப்பட்டுள்ள அறைதல் என்பது இருமடங்கு அவமதித்தலாக உள்ளது, ஏனெனில் அது புறங்கையால் அறைதலாக இருந்தது. (வலது கை பழக்கமுடைய ஒரு மனிதர் ஒருவரை எதிர் கொண்டால், அவர் தமது வலது உள்ளங்கையால் அறைந்தால், அவரை இடது கன்னத்தில் அறைவார். அவரது வலது கன்னத்தில் வலது கையால் அறைதல் என்பது வழக்கமாக அவரது*

புறங்கையால் அறைவதை அவசியமாக்கும்.) முகத்தில் அறைதல் என்பதைப் பற்றி நாம் கலந்துரையாடிக் கொண்டிருக்கிறோம் என்பதைப் புரிந்து கொள்ளுங்கள். ஒரு கடினமான அறை என்பது வேதனை நிறைந்ததாக இருக்கலாம், ஆனால் பெரும்பான்மையான நிகழ்வுகளில் இது உயிருக்கு அச்சுறுத்தலாக இராது.

யாரேனும் ஒருவர் நம்மை அறையும் போது நாம் என்ன செய்ய வேண்டும்? இயேசு, "... அவனுக்கு மறுகன்னத்தையும் திருப்பிக்கொடு" என்று கூறினார். இந்த இடத்தில், விமர்சனம் செய்பவர்கள், கிறிஸ்தவமானது "உண்மையான உலகத்தின்" கருத்தைக் கொண்டிராதது எவ்வாறு என்பதைக் குறித்து ஆரவாரம் செய்யத் தொடங்குகின்றனர். "அந்த ஆணைக்குக் கீழ்ப்படிதல் என்பது, முதுகெலும்பற்ற முட்டாள்களாக, மற்றவர்களால் இன்னும் இழிவாக நடத்தக்கூடும்படி ஊக்குவித்தலை மாத்திரமே விளைவிக்கக் கூடும்" என்று அவர்கள் கூறுகின்றனர். இயேசுவின் அறிவுறுத்தல் இந்த உலகத்தின் தத்துவத்திற்கு எதிராக செல்லுகிறது என்பதை நாம் ஒப்புக்கொண்டாக வேண்டும். நன்கு அறியப்பட்ட ஒரு பழமொழியானது, "கனவான் ஒருவர் எந்த விலை கொடுத்தும் தமது மதிப்பை காப்பாற்ற வேண்டும்" என்று உரைக்கிறது. கடந்த காலத்தில், முகத்தில் அறைதல் என்பது மரணம் வரை போரிடும்படி ஒருவரை அழைக்கும் அழைப்பாகவே அடிக்கடி இருந்துள்ளது.

மேலும் நாம், கிறிஸ்தவர்கள் இயேசுவின் இந்த வார்த்தைகளுடன் போராடுகின்றனர் என்பதையும் ஒப்புக்கொண்டாக வேண்டும். மக்கள் நம்மீது நியாயமற்ற அனுகூலத்தை எடுத்துக் கொள்வதை நாம் அனுமதிக்க வேண்டும் என்று அவர் போதித்தாரா? தந்தையர்கள் தங்கள் மகன்கள் அவர்களைத் தற்காத்துக் கொள்ளுதல் குறித்துத் தாங்கள் போதிக்க வேண்டியது என்ன என்று வியப்படைகின்றனர்.[11] சில கிறிஸ்தவர்கள் இயேசுவின் போதனையை நேரடியான கருத்தில் எடுத்துக் கொண்டு வரையறைக்கு உட்பட்ட அணுகுமுறையை மேற்கொள்கின்றனர்.ஒரு மனிதர், "சரி, அவர் எனது இரு கன்னங்களிலும் அறைய நான் அனுமதிப்பேன். ஆனால் அதன் பின்பு, நீங்கள் இந்த நாடு இது வரையில் கண்டுள்ளவற்றில் எல்லாம் பெரிய சண்டை ஒன்றைக் காண்பீர்கள்!" என்று கூறினார். இந்த மனிதர் இயேசு போதித்துக் கொண்டிருந்து என்ன என்பதன் கருத்தைத் தவறவிட்டு விட்டார்.

இந்த உதாரணம் மற்றும் பிற எல்லாவற்றிற்கும் பின்னால் உள்ளதாக நான் நம்பும் கொள்கையை உங்களுக்குக் கூற என்னை அனுமதியுங்கள். ஏற்கனவே குறிப்பிடப்பட்டுள்ளபடி, முகத்தில் அறைதல் என்பது *அவமதிப்பாக உள்ளது.* அவமதிப்பு என்பது *தனிப்பட்ட வகையில்* வெளிப்படையாக அவமதித்தலாக உள்ளது. இதன் விளைவாக ஏற்படும் காயம் என்பது ஒருவரின் உடலில் அல்ல, ஆனால் ஒருவரின் சுயமரியாதைக்கு ஏற்பட்ட காயமாக உள்ளது. நீங்கள் அவமதிக்கப்படுவதாக நினைக்கும் போது என்ன நடக்கிறது? எனக்கு என்ன நடக்கிறது என்பதை நான் அறிந்துள்ளேன். எனது நரம்புகளினூடே அட்ரீனலைன் பாய்ந்தோடுகிறது. எனது முகம் சூடாகிறது. ஆதார மூலத்தை அறையும்படி எனக்குள் உந்துதல் ஏற்படுகிறது. ஆண்டுகளினூடே நான், திரும்பவும் எண்ணிப்பார்க்கச் சங்கடமாயிருக்கும் விஷயங்களைக் கூறியிருக்கிறேன் மற்றும் செய்து இருக்கிறேன். நான் ஏன் இவ்விதமாக மறுசெயல் செய்திருக்கிறேன்? ஏனென்றால் ஒரு அவமதிப்பு என்பது தனிப்பட்ட வகையில் வெளிப்படையான அவமதிப்பாக உள்ளது. யாரோ ஒருவர் எனது உணர்வுகளைப் புண்படுத்தியதன்

காரணமாக நான் நிலைகுலைகிறேன்.

ஒரு அவமதிப்பிற்கு எனது பதில் செயல் பற்றிய இந்த விவரிப்பில் "நான்" மற்றும் "எனது" என்பவற்றின் பயன்பாட்டையும் "தனிப்பட்ட" என்ற வார்த்தையின் மீது வலியுறுத்தத்தையும் நீங்கள் கவனித்தீர்களா? இயேசுவின் உதாரணங்களில் உருவேற்றப் பட்டிருப்பதாக நான் நம்புகிற கொள்கை இங்குள்ளது: *உங்களைப் பற்றி அதிகக் கவலை கொள்பவராக இராதீர்கள்,* உங்கள் "உரிமைகள்" என்று அழைக்கப்படுபவற்றைப் பற்றி மட்டுமீறிக் கவலை கொள்ளாதீர்கள். இயேசு, "ஒருவன் என்னைப் பின்பற்றி வர விரும்பினால், *அவன் தன்னைத் தான் வெறுத்து,* தன் சிலுவையை எடுத்துக்கொண்டு என்னைப் பின்பற்றக்கடவன்" என்று கூறியபோது (மத்தேயு 16:24; என்னால் வலியுறுத்தப்படுகிறது), அவர் போதித்த அதே கொள்கையைத்தான் இங்கு அவர் போதித்தார்.

இயேசுவின் மரணத்திற்கு முந்திய விசாரணைகளில் அவர் தமது சிந்தையில் கொண்டிருந்த இவ்வகையான ஆவியைச் செயல்விளக்கப்படுத்தினார். மற்ற வகையில் தவறாக நடத்தப்பட்டதுடன் கூடுதலாக, அவர் முகத்தில் அறையப்பட்டார் (காண்க மாற்கு 14:65). ஒரு இடத்தில் கிறிஸ்து அப்படிப் பட்ட நியாயமற்ற செயலுக்கு மறுப்புரை கூறினார் (காண்க யோவான் 18:19-23); ஆனால் அவரால் எதிர்த்துத் தாக்கியிருக்கக் கூடும் என்ற போதிலும் அவர் எதிர்த்துத் தாக்கவில்லை (காண்க மத்தேயு 26:53). பேதுரு பின்வருமாறு எழுதினார்,

> கிறிஸ்துவும் உங்களுக்காகப் பாடுபட்டு, நீங்கள் தம்முடைய அடிச்சுவடுகளைத் தொடர்ந்து வரும்படி உங்களுக்கு மாதிரியைப் பின்வைத்துப்போனார். அவர் பாவஞ்செய்யவில்லை, அவருடைய வாயிலே வஞ்சனை காணப்படவுமில்லை. அவர் வையப்படும்போது பதில் வையாமலும், பாடுபடும் போது பயமுறுத்தாமலும், நியாயமாய்த் தீர்ப்புச்செய்கிறவருக்குத் தம்மை ஒப்புவித்தார் (1 பேதுரு 2:21-23).

நான் பின்வருமாறு ஒரு மறுப்புரையைக் கேள்விப்படுகிறேன்: "ஆனால் நான் மறுகன்னத்தைக் காட்டினால், மக்கள் நான் பலவீனமானவன் என்று நினைப்பார்களே." இருக்கலாம் - ஆனால் உங்கள் செயலானது உங்களை அவமதிப்பவர்களின் இருதயங்களைத் தொடவுங்கூடும். பல ஆண்டுகளுக்கு முன்பு நான், மார்ஷல் கீபிள் என்ற மாபெரும் பிரசங்கியாரைப் பற்றிய நிகழ்ச்சி ஒன்றைக் கேள்விப்பட்டேன். இதயத்தை அசைக்கும், ஆனால் தெளிவாகப் பேசப்பட்ட அவரது பிரசங்கங்களில் ஒன்றிற்குப் பின்பு, சகோதரர் கீபிள், அரங்கின் முன் பகுதியில் நின்றுகொண்டு, அழைப்புக்கு பதில் கொடுத்தவர்களை வாழ்த்திக் கொண்டிருந்தார். ஜன்னல்பகுதியில் இருந்து ஒரு மனிதர் விரைவாக வந்தார். சகோதரர் கீபிள் அவர்கள், ஒரு புன்சிரிப்புடன் விரித்த கைகளுடனும், அம்மனிதரை வாழ்த்துவதற்காக முன்னோக்கி அடியெடுத்து வைத்தார். அம்மனிதர் சகோதரர் கீபிள் அவர்களைப் பலமாக அடித்து ஐக்கிய விருந்து மேஜைக்கு முன்பாக அவரைத் தள்ளிவிட்டார். பின்பு அம்மனிதர் அவரது முகத்தில் துப்பினார். அந்த மனிதரை உற்றுப் பார்த்த சகோதரர் கீபிள் அவர்கள், "எனது முகத்தில் நீங்கள் உமிழ்ந்த இந்த எச்சிலை என்னால்

துடைக்க முடிவது போன்றே, உங்கள் இருதயத்தில் இருந்து கோபத்தையும் உங்கள் ஆத்துமாவில் இருந்து பாவத்தையும் என்னால் சுலபமாகத் துடைக்க முடிய வேண்டும் என்று நான் விரும்புகிறேன்" என்று கூறினார். அந்த விபரத்தின்படி, அம்மனிதர் கண்ணீருடன் கதறினார். அவரது இருதயமானது சுவிசேஷத்திற்குத் திறக்கப்பட்டது. (ஆனால்) நாம் மறுகன்னத்தைக் காட்டும் எல்லா வேளைகளிலும் இது நடந்துவிடாது. இருப்பினும் ஒரு உண்மை உறுதியானதாக உள்ளது: நமது செயலானது நம்மைத் தவறாக நடத்துபவரைப் பாதித்தாலும் இல்லையென்றாலும், அது நம்மைச் செயல்விளைவுக்கு உட்படுத்தும். அது நம்மை மிகச்சிறந்த மக்களாக்கும்.

*(2) "உன் அங்கியையும் விட்டுவிடு."*[12] இரண்டாவது உதாரணம் ஒரு நீதிமன்ற அறையின் விவரிப்பாக உள்ளது: "உன்னோடு வழக்காடி உன் வஸ்திரத்தை எடுத்துக்கொள்ள வேண்டும் என்றிருக்கிறவனுக்கு உன் அங்கியை விட்டுவிடு." (வசனம் 40). இயேசு கூறியது என்ன என்பதை இருபத்தியோராம் நூற்றாண்டின் வாசகர்கள் புரிந்துகொள்ள உதவியாக, NASB வேதாகமத்தில் "shirt" ("சட்டை") மற்றும் "coat" ("கோட்") என்ற சொற்றொடர்கள் பயன்படுத்தப் பட்டுள்ளன,[13] ஆனால் இவைகள் இயேசுவினால் பயன்படுத்தப்பட்ட மிகச்சரியான சொற்றொடர்கள் அல்ல. "சட்டை" என்ற வார்த்தை, உள்ளாடையை (பனியன்) குறித்த (*chiton* என்ற) வார்த்தையில் இருந்து மொழிபெயர்க்கப் பட்டுள்ளது.[14] இது உடலின் தோலுக்கு அடுத்ததாக அணியப்பட்ட மிக நெருக்கமான உடையாக இருந்தது, இது கழுத்திலிருந்து முழங்கால் வரையிலுமான உடல் பாகத்தை மூடியது. சில வேளைகளில் இது "tunic" என்று அழைக்கப்பட்டது. "Coat" என்பதற்கான (*himation* என்ற) வார்த்தை, வெளியில் அணியப்படும் உடையைக் குறித்தது.[15] பெரும்பாலும் "cloak" ("தளருடை" அல்லது "வேட்டி") என்று அழைக்கப்படும், வெளியில் அணியப்படும் இந்த உடை, ஏழைகளினால் இரவு வேளைகளில் போர்வையாகப் பயன்படுத்தப்பட்டது. இந்த தளருடை அடகு வைக்கப்பட்டால்,[16] அது இரவில் அடகு பெற்றவரால் வைத்துக் கொள்ளப்பட இயலாதிருந்தது, ஏனெனில் அது அந்த ஏழை நபரின் மீது ஒரு சிரமத்தைத் திணிப்பதாக இருக்கும் (காண்க யாத்திராகமம் 22:26, 27).

நீங்கள் உங்கள் உள்ளாடைக்காக வேறொருவரால் வழக்குத் தொடுக்கப்பட்ட ஒரு யூதராக இருப்பதாகச் சற்றுநேரம் கற்பனை செய்துகொள்ளுங்கள். நீங்கள் கலக்கம் அடையும் வகையில் உங்கள் எதிராளி அந்த வழக்கில் வெற்றி பெறுகிறார், எனவே நீங்கள் அந்த உடையை அவரிடம் கொடுத்தாக வேண்டியுள்ளது. பின்பு இயேசு செயல்விளைவில் உங்களிடம், "அதைப் பற்றி முறையிடாதீர்கள், ஆனால் உங்கள் மேலாடையையும் கொடுத்து விடுங்கள்" என்று கூறுகிறார். அது எவ்வளவு சினமூட்டுவதாக இருக்கும் என்று உங்களால் கற்பனை செய்ய முடிகிறதா? இருப்பினும் இந்த விவரிப்பின் விபரங்களின் மீது கவனம் குவித்தலானது, கருத்தைத் தவற விடுவதாக இருக்கும். இயேசு இதைப் பற்றிய ஒரு நேரடியான சூழ்நிலையைத் தமது சிந்தையில் கொண்டிருக்கவில்லை. பெரும்பான்மையான யூதர்கள் மூன்று அல்லது நான்கு வகையான உடைகள் அணிந்தனர். ஒருசிலர், சல்லடம் என்று அழைக்கப்பட்ட வேட்டி போன்ற அல்லது அதற்கு ஒப்பாக ஒரு உடையை அணிந்தனர் (காண்க யாத்திராகமம் 28:42), ஆனால் பலர் இவ்வாறு அணிவதில்லை. ஒரு ஆண் வழக்கமாக தமது

மேலாடைக்குள் ஒரு உள்ளாடையை அணிந்தார். இடுப்பைச் சுற்றி ஒரு கச்சை ("girdle") அணியப்படுதலுடன் புறத்தோற்றம் நிறைவு பெற்றது. இயேசுவின் அறிவுறுத்துதல்களை நாம் நேரடியாக எடுத்துக் கொள்வதென்றால், ஒரு மனிதர் தம்மிடம் வழக்காடியவருக்குத் தமது உள்ளாடையையும் மேலாடையையும் கையளித்துவிட்டு, தமது இடுப்பைச் சுற்றி கச்சையை மாத்திரம் அல்லது சல்லடத்தையும் மாத்திரம் சேர்த்து அணிந்தவராக, நீதிமன்ற அறையை[17] விட்டு வெளியேறுவதைக் கொண்டிருப்போம். அது இயேசு முன்மொழிந்ததாக இருக்கவில்லை.[18]

அவர் எதை முன்மொழிந்து கொண்டிருந்தார்? அடியில் மறைந்து கிடக்கும் கொள்கை, முந்திய உதாரணத்தில் உள்ளது போன்றதாகவே இருக்கிறது: உங்கள் தனிப்பட்ட *உரிமைகளை* வற்புறுத்தாதிருங்கள். இந்த நிகழ்வில், *வழக்காடும்* உரிமையைச் செயல்படுத்துதல் என்பது பிரச்சனையாக உள்ளது. சூழ்நிலை மாறுபட்டதாக உள்ளது, ஆனால் சகோதரருக்குள் வழக்காடுதல் என்ற வழக்கத்தை ஊக்கம் இழக்கச் செய்வதில் பவுல் இதே போன்ற கருத்து ஒன்றைக் கூறினார்: "நீங்கள் ஒருவரோடொருவர் வழக்காடுகிறது எவ்விதத்திலும் குற்றமாயிருக்கிறது. அப்படிச் செய்கிறதைவிட நீங்கள் ஏன் அநியாயத்தைச் சகித்துக்கொள்ளுகிறதில்லை, ஏன் நஷ்டத்தைப் பொறுத்துக்கொள்ளுகிறதில்லை?" (1 கொரிந்தியர் 6:7). உலகில் நான் வாழும் பாகத்தில், ஏறக்குறைய எந்த ஒரு போலிப்பகட்டின் மீதும், ஏராளமான பணத்தொகையை நஷ்ட ஈடாகக் கேட்கும் மக்களினால் கொண்டு வரப்பட்ட நியாயமற்ற வழக்குகளினால் நீதிமன்றங்கள் நிறைந்துள்ளன. நாங்கள் அர்க்கன்சாஸின் சியார்சியில் வசித்தபோது, குடியுரிமை வழக்குளில் ஜூரியாக பணியாற்றும்படி அடிக்கடி அழைக்கப்பட்டேன். அப்படி அழைக்கப்பட்ட ஒவ்வொரு வேளையிலும், வாதியின் வக்கீலாக இருந்தவர்,[19] இவைகள் அற்பமான வழக்குகள் என்று நான் நினைத்ததைக் கண்டுபிடித்தபோது நான் அங்கிருந்து வெளியே அனுப்பப்பட்டேன்.

நாம் நமது சட்டப்பூர்வமான உரிமைகளை எந்த சந்தர்ப்பங்களிலும் வலியுறுத்தக் கூடாது என்று நான் கூறவில்லை. பவுல், ஒரு ரோமக்குடிமகன் என்ற தமது சட்டப் பூர்வமான உரிமையைச் சில வேளைகளில் பயன்படுத்தினார் (காண்க நடபடிகள் 16:35-39; 22:24-29). எருசலேமுக்குச் சென்றால், மரணம் காத்திருப்பது உறுதி என்ற நிலையில், அங்கு அனுப்பப் படுவதைத் தவிர்ப்பதற்காக அவர் இராயனுக்கு அபயமிட்டார் (காண்க நடபடிகள் 25:9-12). இது ரோமக்குடிமகன் என்ற வகையில் அவரது உரிமையாக இருந்தது. கிறிஸ்துவின் ஊழியத்தினுடைய நலம் அல்லது நமது குடும்பத்தினுடைய நலம் உள்ளடங்கிய சூழ்நிலைகள் எழும்பலாம்; அப்படிப்பட்ட நிகழ்வுகளில், ஒருவர் தமது சட்டப்பூர்வமான உரிமைகளை வற்புறுத்துதல் என்பது சூழ்நிலைக்கு உகந்ததாக இருக்கலாம். இருப்பினும் நாம் சுயநலம் அல்லது பேராசையினால் தூண்டப்படாது இருப்பதை நிச்சயப்படுத்திக் கொள்வோமாக. நாம் நேசிக்கும் கிறிஸ்துவின் மீது எதிர்மறையான கருத்துக்களைப் பிரதிபலிக்கும் வகையில் எதையும் செய்வதைக் காட்டிலும் நீதிமன்ற அறையில் தவறாகத் துன்புறுதல் மேன்மையானதாக இருக்கும்.

(3) "இரண்டு மைல் தூரம் போ." இயேசுவின் மூன்றாவது விவரிப்பு பின்வருமாறு உள்ளது: "ஒருவன் உன்னை ஒரு மைல் தூரம் வரப் பலவந்தம்பண்ணினால், அவனோடு இரண்டு மைல் தூரம் போ"

(வசனம் 41). முதல் இரண்டு உதாரணங்கள், தற்காலச் சரிநேர்ப்படிவங்களைக் கொண்டுள்ளன, ஆனால் இந்த உதாரணத்திற்கு நம்மில் பலருக்கு விளக்கம் தேவைப்படுகிறது. “பலவந்தம்பண்ணினால்” என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள (*angareuo* என்ற) வார்த்தை “பணிசெய்யும்படி வற்புறுத்தப்படுதல்”[20] என்று அர்த்தப்படுகிறது. பெர்சியர்கள் தங்கள் ராஜரீகச் செய்தியாளர்களுக்குக் குடிமக்கள் உதவி செய்யும் பழக்கத்தை அறிமுகப்படுத்தியிருந்தனர். அந்த வழக்கத்தை ரோமர்கள் எடுத்துக்கொண்டு அதை விரிவாக்கினர். பலஸ்தீன நாட்டில் ரோமப் போர்ச்சேவகர்கள் தங்களுக்கு உதவும்படி யூதக் குடிமக்களைச் சட்டபூர்வமாகப் பலவந்தம் செய்ய முடிந்தது. இதே வார்த்தை மத்தேயு சுவிசேஷத்தின் பிற்பகுதியிலும் காணப்படுகிறது: “போகையில், சிரேனே ஊரானாகிய சீமோன் என்னப்பட்ட ஒரு மனுஷனை அவர்கள் கண்டு, அவருடைய சிலுவையைச் சுமக்கும்படி ***அவனைப் பலவந்தம் பண்ணினார்கள்***” (27:32; என்னால் வலியுறுத்தப்படுகிறது). நமது வேதபாட வசனப் பகுதியைப் பொறுத்த மட்டில், ரோமப் போர்ச்சேவகர் ஒருவர் தமது கருவிகளை “ஒரு மைல்” தூரம் சுமந்து வரும்படி ஒரு யூதரைப் பலவந்தம் பண்ண முடிந்தது. இது ஆயிரம் அடிவைப்புகள்[21] கொண்ட ஒரு ரோமானிய மைலாக அல்லது ஆயிரம் கெஜம் தூரமாக இருந்தது. (அமெரிக்காவில் ஒரு மைல் என்பது 1760 கெஜங்கள் அல்லது 1600 மீட்டர்களைவிடச் சற்றே அதிகமான தூரமாக உள்ளது.)

நீங்கள் ஒரு யூத விவசாயி என்று கற்பனை செய்துகொள்ளுங்கள். அது ஒரு வெப்பமான வெய்யில் நாளாக உள்ளது, ஆனால் மேற்கில் மேகங்கள் கூடத் தொடங்குகின்றன. வானிலை மாறுவதற்கு முன்னர் நீங்கள் உங்கள் பயிரைப் பெறுவதற்காகக் கடினமாக உழைத்துக் கொண்டிருக்கிறீர்கள். உங்கள் நெற்றியைத் துடைப்பதற்காக நீங்கள் சற்றே தாமதிக்கிறீர்கள், அப்போது சாலையில் ஒரு ரோமப் போர்ச்சேவகர் வருவதை நீங்கள் காணுகிறீர்கள். அவரைக் கண்ணோக்குதல் என்பது உங்களைப் புண்படுத்துகிறது, தேவனுடைய நாட்டைப் பிடித்துக் கொண்டுள்ள அந்த அவிசுவாசி பரிசுத்தமான மண்ணின் மீது மிதிக்கிறார். போர்வீரர் நெருங்குகையில்,அவர் பல பொட்டலங்களைத் தரையில் போட்டு, “அவற்றைப் பொறுக்கி எடு!” என்று உங்களைப் பார்த்துச் சினத்துடன் கூறுகிறார். நீங்கள் உங்கள் கருவிகளைக் கீழே போட்டுவிட்டு, நடந்து சென்று அவரது பைக்கட்டுகளைப் பொறுக்கி எடுக்கிறீர்கள். நீங்கள் அந்தப் போர்ச்சேவகர்கருக்குப் பின்னால் சிரமத்துடன், கனத்த சுமையின் கீழ் வியர்வை வழிய நடக்கிறீர்கள். நீங்கள் எவ்வாறு உணர்வீர்கள்? கோபம்? மறுப்புணர்வு? கடைசியில் நீங்கள், தேவைப்படுமளவு தூரத்தின் முடிவை அடைந்து பைக்கட்டுகளைக் கீழே வைக்கிறீர்கள். நீங்கள் உங்கள் நிலத்திற்குத் திரும்ப நடந்து வரும்போது, வழிமுழுவதிலும் நீங்கள் முணுமுணுத்துக் கொண்டே வருகிறீர்கள். நீங்கள் வெறுக்கும் சில விஷயங்களை நீங்கள் செய்ய வேண்டியதாக இருந்தது; நீங்கள் அனேகமாக உங்கள் பயிர்களைப் புயல் அடிப்பதற்கு முன்னர் சேகரித்து உள்ளே கொண்டு செல்ல முடியாமல் இருப்பீர்கள். எல்லாவற்றிற்கும் மேலாக, இப்போது நீங்கள் ஒரு புறஜாதியாரையும் அவரது கருவிகளையும் நெருங்கிய தொடர்பு கொண்டதால், சடங்காச்சார ரீதியாக அசுத்தமாக்கப்பட்டிருக்கிறீர்கள்!

அதுவே காட்சி அமைவாக உள்ளது, பின்பு இயேசு “இரண்டு மைல் தூரம் ...” என்று கூறுகிறார்! உண்மையில் அவர், “[அவனோடு]

இன்னும் இரண்டு மைல் தூரம் ...” என்று கூறியதாகச் சில கையெழுத்துப் பிரதிகள் சுட்டிக்காண்பிக்கின்றன.[22] இயேசு, தமது சீஷர்கள் செய்வதற்குக் கடினமான பணிப்பொறுப்புகளை வைப்பதினால் அவர்களைச் சோதித்தாரா? இந்த இரண்டாவது மைல்கள் (இரண்டாவது மற்றும் மூன்றாவது மைல்கள்) சகித்துக்கொள்ளப்பட வேண்டியவைகளாக மாத்திரம் இருந்தனவா? அவைகள் இருதயத்தில் எப்போதும் வளரும் வெறுப்புணர்வுடன் நடக்கப்பட வேண்டியவையாக இருந்தனவா? இல்லை, இயேசு தமது பின்பற்றாளர்களிடத்தில் ஒரு குறிப்பிட்ட வகையிலான எண்ணப்போக்கை மேம்படுத்த முயற்சித்தார்: ஒருவரிடத்தில் கேட்கப்பட்டதற்கும் அதிகமாக செய்ய மனவிருப்பம் கொண்ட எண்ணப்போக்கு. மேலும் இந்த இரண்டாவது மைல் தூரமானது மனவிருப்பத்துடன் மாத்திரமல்ல ஆனால் உற்சாகத்துடனும் செய்யப்பட வேண்டும் என்று நான் நம்புகிறேன்.[23] இன்றைய நாட்களில் நாம், யாரேனும் ஒருவர் “இரண்டு மைல் தூரம் செல்லுதல்” பற்றிப் பேசுகிறோம். அவர் தம்மிடத்தில் எதிர்பார்க்கப் பட்டதைவிட அதிகமானதை, மிக அதிகமானதைச் செய்தார் என்று நாம் அர்த்தப்படுத்துகிறோம். அதை அவர், நன்மை மாத்திரமே விளையத்தக்க வகையில், ஒரு நேர்மறையான எண்ணப்போக்குடன் செய்தார் என்றும் நாம் அர்த்தப்படுத்துகிறோம்.

பல நடைமுறைப் பயன்பாடுகள் மனதிற்கு வருகின்றன. நாம் நமது திருமணங்களிலும் நமது இல்லங்களிலும் “இரண்டு மைல் தூரம்” செல்வது அவசியமாக உள்ளது. தங்கள் பிள்ளைகளுக்கு அதிகமாகச் செய்ய முடிந்தவர்களாக இருக்கும்போதும், அவர்களுக்கு - உணவு, உடை மற்றும் உறங்குவதற்கு ஒரு இடம் என்ற - மிகவும் அத்தியாவசியமானவற்றை மாத்திரமே அளிக்கிற பெற்றோர்களைப் பற்றி நீங்கள் என்ன நினைப்பீர்கள்? உங்களைப் பற்றி எனக்குத் தெரியாது, ஆனால் நான், இரண்டு மைல் தூரமும் - மற்றும் மூன்றாவது, நான்காவது மற்றும் ஐந்தாவது மற்றும் அதற்கு அப்பால் உள்ள மைல்கள் தூரமும் - சென்ற பெற்றோர்களைக் கொண்டிருந்தேன். அதுபோலவே, சபையிலும் நாம் “இரண்டாவது மைல் தூரமும் செல்லுவது” அவசியமாக உள்ளது. சில கிறிஸ்தவர்கள் பரலோகத்திற்குச் செல்வதற்குத் தாங்கள் குறைந்தபட்சம் செய்ய வேண்டியவற்றை அறிய விரும்புகின்றனர். இன்னும் கர்த்தருக்கான தங்களது ஊழியங்களில் “இரண்டாவது மைல் தூரம் செல்பவர்கள்” (இவர்களுக்காகத் தேவனுக்கு நன்றி) இருக்கின்றனர். இதன் நடைமுறைப் பயன்பாட்டை நாம், பள்ளியின் அறைக்கூடங்கள் மற்றும் பணியிடங்கள் ஆகியவற்றிற்கும் விரிவாக்க முடியும். தங்களிடத்தில் கேட்கப் பட்டவற்றை மாத்திரம் செய்கிற, அதற்கு மேல் செய்யாத மாணவர்களும் வேலையாட்களும் உள்ளனர். இன்னும் கேட்கப்பட்டதற்கு அப்பாலும் செய்யச் செல்கிறவர்கள் இருக்கின்றனர் (காண்க கொலோசெயர் 3:23, 24). இதே கொள்கை, குடியுரிமை மற்றும் மற்ற செயல்களின் வட்டாரத்திலும் ஏற்படுத்தப்படுகிறது.

மீண்டுமாக, நாம் நம்மைப் பற்றியும் நமது உரிமைகளைப் பற்றியும் மாத்திரம் நினைப்பவர்களாக இருக்கக் கூடாது என்பதே அடியொற்றியுள்ள கொள்கையாக இருக்கிறது. நாம், நம்மைக் காட்டிலும் மற்றவர்களை முதலிடத்தில் வைத்துப் பார்க்க வேண்டியவர்களாக இருக்கிறோம். நாம் அவ்வாறு செய்தால், அவர்களிடத்தில் நாம் ஒரு நேர்மறையான செல்வாக்கைக்

கொண்டிருக்கலாம். யூத விவசாயி பற்றிய எனது விவரிப்புக்குத் திரும்புகையில், பின்வரும் வரிசை நிகழ்வைக் கற்பனை செய்யுங்கள். கடைசியில் அந்தப் போர்ச்சேவகர் உங்களிடத்தில், "நீ எனது கருவிகளைப் போதிய அளவு தூரம் சுமந்து வந்து விட்டாய். இப்போது நீ உன் வீட்டிற்குச் செல்லலாம்" என்று கூறுகிறார். பின்பு அவரது சுமைகளைத் தரையில் எறிவதற்குப் பதிலாக நீங்கள் புன்சிரிப்புடன், "பரவாயில்லை. இதை நான் நகரத்தின் வாயில் வரையிலும் சந்தோஷமாகச் சுமந்து வருவேன்" என்று கூறுகிறீர்கள். வேறு எதுவும் இல்லை என்றாலும் இந்தக் செயலானது அந்தப் போர்வீரரைத் திகைப்பில் ஆழ்த்தும். அது உங்கள் மதத்தைப் பற்றியும் நீங்கள் ஆராதிக்கும் தேவனைப் பற்றியும் உங்களிடத்தில் கேட்கும்படி அந்தப் போர்வீரரைத் தூண்டுமா? இருக்கலாம் அல்லது இல்லாதிருக்கலாம். இருப்பினும் அது உங்களை மிகச்சிறப்பான நபராக்கும்.

*(4) "மற்றவர்களுக்கு உதவுவதில் சுயநலம் இல்லாதவராக இருங்கள்."* முதல் பார்வையில் இயேசுவின் நான்காவது விவரிப்பு மற்றவர்களுக்குப் பொருந்துவதாகக் காணப்படுவதில்லை. முதல் மூன்று உதாரணங்கள் எதிர்த்துத் தாக்காதிருத்தல் என்ற ஆய்வுக்கருத்தை மையங்கொண்டுள்ளன: முகத்தில் அறையும்போது. உங்களிடம் வழக்காடப்படும்போது அல்லது நீங்கள் ஒரு மைல் தூரம் வர வேண்டும் என்று பலவந்தம் செய்யப்படும் போது எதிர்த்துத் தாக்காதிருங்கள். இருப்பினும் அடுத்ததாக இயேசு, மற்றவர்களுக்குக் கொடுத்தல் பற்றிய அறிவுறுத்துதல்களைத் தந்தார்: "உன்னிடத்தில் கேட்கிறவனுக்குக் கொடு, உன்னிடத்தில் கடன்வாங்க விரும்புகிறவனுக்கு முகங்கோணாதே"[24] (வசனம் 42).

மீண்டும் ஒருமுறை நாம், கிறிஸ்தவத்தை எள்ளிநகையாடவும் சில கிறிஸ்தவர்கள் குழப்பம் அடையவும் பயன்படுத்தப்பட்டுள்ள ஒரு கட்டளையைக் கொண்டுள்ளோம். தகுதியற்ற நிலையில் எடுத்துக் கொள்ளப்படும் என்றால் இது, யார் கேட்டாலும் எதற்காகக் கேட்டாலும் அவர்களின் விருப்பங்களுக்கு நீங்கள் இசைந்து கொடுக்க வேண்டும் என்று அர்த்தப்படும்.

- உங்கள் பிள்ளை உங்களிடம் ஒரு விருந்தோம்பலைக் கேட்கிறான் - அவனுக்கு நீங்கள் அதைத் தரவேண்டும்.
- உங்கள் வீட்டைக் கடந்து செல்லும் ஒரு மனிதர் அதன் தோற்றத்தினால் மனம் ஈர்க்கப்படுகிறார். அவர் உங்கள் வீட்டைக் கேட்கிறார் - அவருக்கு நீங்கள் அதைத் தரவேண்டும்
- உங்கள் மனைவி ஒரு மனிதருக்கு வசீகரமாக இருக்கிறார் - அவருக்கு உங்கள் மனைவியை நீங்கள் தரவேண்டும்.

இந்த உதாரணங்கள், இந்தக் கட்டளையை எந்த அளவுக்கு மதியீனமான மிகைமுனைகளுக்கு எடுத்துக் கொள்ளப்பட முடியும் என்று காண்பிக்கின்றன. இயேசுவின் வார்த்தைகள் ஏதேனும் ஒரு வழியில் தகுதிப்படுத்தப்பட வேண்டியவைகளாக உள்ளன என்பது தெளிவு.

இயேசுவின் வார்த்தைகளுக்கு அநியாயம் எதுவும் செய்துவிடாமல் அவைகள் தகுதிப்படுத்தப்படலாம் என்பதற்கு நிரூபணம் தேவைப்படுகிறது என்றால் பின்வருவதை ஆழ்ந்து சிந்தியுங்கள். மலைப்பிரசங்கத்தில் சற்றுப் பின்பு

இயேசு, ஜெபம் பற்றிப் பின்வரும் வார்த்தைகளை உரைத்தார்: "கேளுங்கள், அப்பொழுது உங்களுக்குக் கொடுக்கப்படும்"; "ஏனென்றால், கேட்கிறவன் எவனும் பெற்றுக்கொள்கிறான்" (மத்தேயு 7:7அ, 8அ). இன்னொரு சந்தர்ப்பத்தில் அவர், "என் நாமத்தினாலே நீங்கள் எதைக் கேட்டாலும் அதை நான் செய்வேன்" என்று கூறினார் (யோவான் 14:14). இந்த வாக்குத்தத்தங்கள், யார் ஜெபித்தாலும் அல்லது அவர் கேட்பது எதுவாக இருந்தாலும், ஒவ்வொரு வேண்டுகோளையும் தேவன் அருளுவார் என்று அர்த்தப்படுகின்றனவா? பவுல் தமது சரீரத்தில் இருந்த முள் நீக்கப்பட வேண்டும் என்று மூன்று முறைகள் கேட்டுக் கொண்டார், ஆனால் அவரது வேண்டுகோளைத் தேவன் அருளவில்லை (2 கொரிந்தியர் 12:7-9). சிலருக்கு யாக்கோபு "நீங்கள் விண்ணப்பம் பண்ணியும், உங்கள் இச்சைகளை நிறைவேற்றும்படி செலவழிக்க வேண்டுமென்று தகாதவிதமாய் விண்ணப்பம்பண்ணுகிறபடியினால், பெற்றுக்கொள்ளாமலிருக்கிறீர்கள்" என்று கூறினார் (யாக்கோபு 4:3அ). நமக்குக் கொடுப்பதாகக் கூறும் கர்த்தருடைய வாக்குத்தத்தம் தகுதிப்படுத்தப்படக் கூடுமென்றால், மற்றவர்கள் நம்மிடத்தில் கேட்பவற்றை நாம் கொடுக்க வேண்டும் என்ற அவரது அறிவுறுத்துதல்கள் தகுதிப்படுத்தப்படக் கூடியவையாகவே உள்ளன.

தகுதிகள் என்பது பல வழிகளில் விளக்கப்படுத்தப் படலாம். ஒரு தனிநபர் வேண்டிக் கேட்டுக் கொள்ளும் *ஒவ்வொன்றையும்* அவருக்குத் தரவேண்டும் என்று இயேசு கூறவில்லை என்பதை நாம் கவனிக்கக் கூடும்.[25] யாரேனும் ஒருவர் கேட்கிற எல்லாவற்றையும் அவருக்குக் கொடுத்தல் என்பது அவருக்கு அழிவை ஏற்படுத்துவதாக இருக்கலாம். மற்றவர்கள் விரும்புகிறவற்றை *மிகச்சரியாக* அவர்களுக்குக் கொடுக்க வேண்டும் என்றும் இயேசு கூறவில்லை. ஒரு மனிதர் தமக்கு உணவு அல்லது வேலை என்பது உண்மையில் தேவைப்படும் நிலையில், அவர் பணம் கேட்கலாம்.[26]

தகுதிகளை D. A. கோர்ஸன் அவர்கள் தொகுத்துரைக்கும் பின்வரும் வகையை நான் விரும்புகிறேன். அவர், "அன்பும் வேதவசனங்களும் கட்டளை இடுவது எதுவோ ... அதுவே விசுவாசிகளின் பதில்செயலுக்கு ஒரே வரையறையாக உள்ளது என்று சொன்னார்"[27] அன்பும் வேதவசனங்களும், நமது கொடுத்தலின் மீது வரையறை செய்வது என்ன? அன்பானது, ஒரு மனிதரைத் துன்புறுத்துகிற அல்லது அவருக்கு ஊறுவிளைவிக்கக் கூடிய எதையும் அவருக்கு ஒருக்காலும் நான் கொடுக்க மாட்டேன் என்று கூறுகிறது. (அது நமது பிள்ளைகள் விருந்தோம்பலைக் கேட்கும் எந்த வேளையிலும் அவர்களுக்கு அதைக் கொடுப்பது பற்றிக் கவனம் எடுத்துக்கொள்கிறது.)

மற்ற வேதவசனங்கள் எவற்றை வரையறை செய்கின்றன? வேதாகம விளக்கத்தின் பின்வரும் அடிப்படைக் கொள்கையை மனதில் காத்துக் கொள்ளுங்கள்: "தெளிவற்ற ஒரு வேதவசனப் பகுதியானது வேறொரு இடத்தில் உள்ள தெளிவான போதனைக்கு நேர்மாறாக இருக்கும் வகையில் அதை விளக்கப்படுத்தாதீர்கள்." வேறொரு இடத்தில் உள்ள தெளிவான வசனப் பகுதிகள் மற்றவர்களுக்கு நாம் கொடுத்தலின் மீது சில வரையறைகளை வைக்கின்றன. எடுத்துக்காட்டாக, இன்னொருவருக்கு நாம் கொடுத்தலானது அவரது பகுதியில் சோம்பேறித்தனத்தை ஊக்குவிக்காதபடி நாம் கவனமாக இருக்க வேண்டும்.[28] "ஒருவன் வேலைசெய்ய மனதில்லாதிருந்தால் அவன் சாப்பிடவும் கூடாது ..." (2 தெசலோனிக்கேயர் 3:10). மீண்டுமாக, நமது

சொந்தக் காரியங்களைப் பற்றி அக்கறை எடுத்துக் கொள்ளும் கொள்கையானது, நமது குடும்பத்திற்குத் தேவையானவற்றைக் கொடுத்தலை நீக்கிப்போடும். "ஒருவன் தன் சொந்த ஜனங்களையும் விசேஷமாகத் தன் வீட்டாரையும் விசாரியாமற்போனால், அவன் விசுவாசத்தை மறுதலித்தவனும், அவிசுவாசியிலும் கெட்டவனுமாயிருப்பான்" (1 தீமோத்தேயு 5:8).

அது, 42ம் வசனம் எதை அர்த்தப்படுத்துவதில்லை என்பதற்கு போதுமானதாக உள்ளது. இந்த உதாரணம் முந்திய உதாரணங்களுடன் எவ்வாறு பொருந்துகிறது? மீண்டுமாக, நாம் சுயமையம் கொண்டவர்களாக இருக்கக் கூடாது என்பதே கொள்கையாக உள்ளது. நமது உடைமைகளை நாம் இழந்துபோக விட்டுவிடக் கூடாத அளவுக்கு அவற்றின்மீது நாம் அதிகம் பிணைப்புக் கொண்டிருக்கக் கூடாது.[29] தேவையில் உள்ளவர்களுக்குக் கொடுக்க நாம் தயாராக இருக்கவேண்டும்.

இந்த சந்தர்ப்பப் பொருளில் இயேசு, நம்மைத் தவறாக நடத்துபவர்களை நாம் எவ்வாறு நடத்த வேண்டும் என்பதைக் குறிப்பிட்டார். அவர்களுக்கு நாம் செய்ய வேண்டியது என்ன? அவர்களுக்குத் தேவைப்படுவதை நாம் அளிக்க வேண்டும். இந்த உதாரணமானது எதிர்மறையில் இருந்து நேர்மறைக்கு கடந்து செல்கிறது. எதிர்த்துத் தாக்குதல் இன்றி நாம் தவறாக நடத்தப்படுவதைச் சகித்துக் கொள்வது மட்டுமின்றி, நாம் நம்மை எதிர்ப்பவர்களுக்கு உதவ ஒரு வழியைக் கண்டறிய வேண்டியவர்களாக இருக்கிறோம் (காண்க ரோமர் 12:19-21). நம்மைத் தவறாக நடத்துபவர்களை நாம் நேர்மறையாக நடத்துதல் என்பது அடுத்த பாடத்தில் இன்னும் விரிவாகக் கலந்துரையாடப்படும்.

இருப்பினும் நாம், மத்தேயு 5:42ன் நடைமுறைப் பயன்பாட்டை நமது விரோதிகளிடத்தில் மாத்திரம் கொண்டிருக்கத் தேவையில்லை. என்னுடையது என்ன என்பதைப் பற்றிக் கவலையுள்ளவர்களாக இருப்பதற்குப் பதிலாக, நான் பிறருடன் பகிர்ந்து கொள்ளத் தயாராக இருத்தல் அவசியமாகிறது, நான் இறுக்கமான கைகளுடன் கஞ்சத்தனமாக இருப்பதற்கு பதிலாக நான் திறந்த மனதுடனும் பெருந்தன்மையுடனும் இருப்பது அவசியமாகிறது. யோவான், "ஒருவன் இவ்வுலக ஆஸ்தி உடையவனாயிருந்து, தன் சகோதரனுக்குக் குறைச்சலுண்டென்று கண்டு, தன் இருதயத்தை அவனுக்கு அடைத்துக்கொண்டால், அவனுக்குள் தேவ அன்பு நிலைகொள்ளுகிறதெப்படி?" என்று கூறினார் (1 யோவான் 3:17). பவுல், "ஆகையால் நமக்குக் கிடைக்கும் சமயத்திற்குத்தக்கதாக, யாவருக்கும், விசேஷமாக விசுவாச குடும்பத்தார்களுக்கு, நன்மைசெய்யக்கடவோம்" என்று எழுதினார் (கலாத்தியர் 6:10) நம்மைக் குறித்துப் பரிதபிக்கிற ஒரு "பிரதான ஆசாரியர்" நமக்கு இருக்கிறார் (எபிரெயர் 4:15); நாமும் மற்றவர்களைக் குறித்துப் பரிதபிப்போமாக.

## முடிவுரை

நாம் தவறாக நடத்தப்படும்போது நாம் என்ன செய்ய வேண்டும்? சாத்தியமான குறைந்த பட்சம் மூன்று பதில்களை நாம் கொண்டிருக்கிறோம்:[30]

- *வரையறையற்ற வகையில் எதிர்த்துத் தாக்குதல்.* அது காட்டுத்தனமான சட்டமாக உள்ளது, அது உலகத்தின் வழியாக உள்ளது.
- *வரையறைக்கு உட்பட்ட வகையில் எதிர்த்துத் தாக்குதல்.* அது

மோசேயின் நியாயப்பிரமாணம் முன்மொழிந்த நீதியின் சட்டமாக உள்ளது.

- *வரையறையற்ற வகையில் நல்ல சிந்தை. அது கிறிஸ்துவின் வழியாக, அன்பின் பிரமாணமாக உள்ளது.*

*இந்தப் பாடத்தில் அறிமுகப்படுத்தப்பட்ட மூன்றாவது பதில்செயல் பற்றி நமது அடுத்த படிப்பில் நாம் விபரமாகக் கலந்துரையாடுவோம்.*

*இந்த எடுத்துரைப்பில் நாம், மத்தேயு 5:38-42ல் மிகச்சரியாக இயேசு போதித்தது என்ன என்பதைப் புரிந்துணர நாம் போராடியிருக்கிறோம், ஆனால் இவ்வசனங்களுக்குக் கீழ்ப்படிதல் என்பது இவற்றைப் புரிந்து கொள்வதற்குப் பத்து மடங்கு சுலபமான வழியாக உள்ளது. ஒருவேளை என்னைப் போன்றே நீங்களும் உணரலாம்: மத்தேயு 5ல் நான் இன்னும் அதிகமாகச் செல்லச் செல்ல, கிறிஸ்து கேட்டுக் கொள்ளுபவை அதிகம் கடினமாகின்றன மற்றும் தேவனுடைய உதவி இன்னும் அதிகமாக எனக்குத் தேவை என்று நான் உணருகிறேன். நீங்கள் இயேசுவின் மீது விசுவாசம் கொண்டிருந்தும், வசனரீதியான ஞானஸ்நானத்தை இன்னும் பெறாதிருந்தால், தேவனுடைய ஆவியானவர் உங்களைப் பெலப்படுத்தும்படிக்கு அதை நீங்கள் உடனே பெற்றுக் கொள்வது அவசியமாகிறது (நடபடிகள் 2:38; காண்க ரோமர் 8:13, 26). நீங்கள் ஏற்கனவே ஒரு கிறிஸ்தவராக இருந்தால், உங்களை விட்டு விலகாத அல்லது உங்களைக் கைவிடாத அவரைச் சார்ந்திருக்கக் கற்றுக்கொள்ளுங்கள் (எபிரெயர் 13:5ஆ, 6).*

---

*குறிப்புகள்*

[1]*சமனான வெளியில் செய்யப்பட்ட பிரசங்கத்தில் இதைப் போன்றதொரு பகுதி உள்ளது: லூக்கா 6:27-36. அவ்வசனப் பகுதியை நீங்கள் மத்தேயு 5:38-48 உடன் ஒப்பிட விரும்புவீர்கள். ஒற்றுமைகளையும் வேற்றுமைகளையும் குறிப்பிடுங்கள்.* [2]D. Martyn Lloyd-Jones, *Studies in the Sermon on the Mount,* vol. 1 (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1959), 273. [3]*பதிலீடு செய்தலின் இவ்வகையான பழைய ஏற்பாட்டு உதாரணம் ஒன்றிற்கு யாத்திராகமம் 21:26, 27ஐக் காணவும்.* [4]David Hill, *The Gospel of Matthew*, New Century Bible Commentary series (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1972), 127. [5]*கிரேக்க வசனத்தில், பெயர்ச்சொல் எதுவுமின்றி, "தீமை" என்ற பெயர் உரிச்சொல் மாத்திரம் உள்ளது (இதே சூழ்நிலையை நாம் மத்தேயு 5ன் 39ம் வசனத்திலும் கொண்டிருந்தோம்), இவ்வாறாக* KJV *வேதாகமத்தில் "தீமையோடு எதிர்த்து நிற்க வேண்டாம்" என்றுள்ளது. இருப்பினும் நாம் பொதுவாகத் தீமையோடு எதிர்த்து நிற்க வேண்டும். மற்றும் "பொல்லாங்கன்" (இது சாத்தானைக் குறிக்கிறது) இங்கு வேலை செய்வதில்லை (காண்க யாக்கோபு 4:7). சந்தர்ப்பப் பொருளில், "பொல்லாங்கான நபர்" - சீஷர் ஒருவரை அறைகிற, வழக்காடுகிற மற்றும் கட்டாயப்படுத்துகிற ஒருவர் - என்பவரையே இயேசு தமது சிந்தையில் கொண்டிருந்தார்.* [6]*"எதிர்த்து" என்பது "எதிராக அமைதல்"* (histemi [*"நிற்க"*] *என்பதற்கு முன்னர்* *anti* [*"எதிராக"*] *என்ற சொல்லுள்ளது) என்ற நேரடி அர்த்தம் கொண்டுள்ள* *anthistemi*, *என்ற கிரேக்கக் கூட்டுவார்த்தையில் இருந்து வருகிறது* (W. E. Vine, Merrill F. Unger, William White, Jr., *Vine's Complete Expository Dictionary of Old and New Testament Words* [Nashville: Thomas Nelson Publishers,

1985], 528). [7]*நடபடிகள் 16:35-39; 23:3; 25:9, 10 ஆகிய வசனங்களைக் கவனியுங்கள். இந்த ஒவ்வொரு நிகழ்விலும் பவுல் ஒரு கொள்கைக்காக நின்றார், அதை வெறுமனே தாம் தனிப்பட்ட வகையில் தவறாக நடத்தப்பட்டதன் காரணமாக மாத்திரம் அவர் அவ்வாறு செய்யவில்லை.* [8]*இந்தப் பாடத்தின் பிற்பகுதியில், நாம் (கேட்டவர்களுக்குத் கொடுத்தல் என்ற) நான்காவது விவரிப்பை ஆழ்ந்து சிந்தித்து அது எவ்வாறு முதல் மூன்று உதாரணங்களுடன் பொருந்துகிறது என்பதையும் நிலைநாட்டுவோம்.* [9]B. W. Johnson, *People's New Testament* (St. Louis: Christian Publishing Co., 1891) (http://www.ccel.org/ccel/johnson_bw/pnt.pnt0105.html; Internet; accessed 30 May 2008). [10]*1 இராஜாக்கள் 22:24 மற்றும் புலம்பல் 3:30 ஆகியவை கன்னத்தில் அறைதலைக் குறிப்பிடுகிற இரண்டு வசனப் பகுதிகளாக உள்ளன. முகத்தில் அறைதல் பற்றிய குறிப்பு ஒன்று 2 கொரிந்தியர் 11:20ம் வசனத்திலும் உள்ளது.*

[11]*இந்தப் பாடக்கருத்தின்மீது மிகநீண்ட ஒரு கலந்துரையாடலுக்கு இது இடமாக இருப்பதில்லை, ஆனால் சிந்திப்பதற்குச் சில விஷயங்கள் இவ்விடத்தில் உள்ளன: உங்கள் பிள்ளையானவன் தனது கைமுட்டிகளால் வழக்குகளைத் தீர்த்துக் கொள்ளும்படி நீங்கள் போதித்தால், அவன் பெரியவனாகும்போது என்ன செய்வான்?* [12]*மத்தேயு 5ல் உள்ள மற்றொரு நீதிமன்ற அறை விவரிப்பிற்கு, 22 மற்றும் 25 ஆகிய வசனங்களைக் காணவும்.* [13]KJV *வேதாகமம்,* "coat" *மற்றும்* "cloak" *என்ற வார்த்தைகளைப் பயன்படுத்தித் தனது வாசகர்களுக்கு இதே விஷயத்தைச் செய்தது.* [14]Vine, 105. [15]Ibid. [16]*இந்த சந்தர்ப்பப் பொருளில், "அடகு" என்பது, ஒரு கடனுக்கான பிணையமாகத் தரப்படுகிற காப்புப் பொருளாக உள்ளது* (*The American Heritage Dictionary*, 4th ed. [2001], s.v. "pledge"). [17]*சிலர் இவ்வார்த்தைகளை, எல்லாச் செயலும் நீதிமன்ற அறைக்குள் செல்வதற்கு முன்பே நடப்பதாக அர்த்தப்படுத்தும் வகையில், "உன்னுடன் வழக்காட விரும்புகிறவனுக்கு" என்று எடுத்துக் கொள்கின்றனர். இருப்பினும் இவ்வசனப் பகுதி, வழக்கில் வெற்றி பெற்றவர் ஒரு உடையை எடுத்துக் கொள்வதாகவும், வழக்கில் தோற்றவர் தமது இரண்டாவது உடையையும் அவருக்குக் கொடுப்பதாகவும் அர்த்தப்படுத்துகிறது என்பதே இயல்பானதாக உள்ளது.* [18]*வேதாகமம் முழுவதிலும், நிர்வாணம் (போதுமான உடையின்றி இருத்தல்) என்பது வெட்கக் கேட்டுடன் இணைவு கொண்டுள்ளது (காண்க ஏசாயா 47:3; வெளிப்படுத்தின விசேஷம் 3:18).* [19]*வாதி என்பவர், இன்னொருவருக்கு எதிராக வழக்குத் தொடுப்பவராக இருக்கிறார் (இவர்* defendant *என்று அழைக்கப்படுகிறார்).* [20]Vine, 117.

[21]*"மைல்" என்பது "ஆயிரம்" என்று அர்த்தப்படுகிற மில்லி என்ற இலத்தீன் வார்த்தையில் இருந்து வருகிறது.* [22]D. A. Carson, "Matthew," *The Expositor's Bible Commentary,* vol. 8 (Grand Rapids, Mich.: Regency Reference Library, Zondervan Publishing House, 1984), 156. [23]*நாம் கொடுக்கிற வழிமுறைக்கு ஒரு ஒப்பீடு ஏற்படுத்தப் படலாம்: மனவிருப்பத்துடனும் உற்சாகத்துடனும் (காண்க 2 கொரிந்தியர் 9:7).* [24]*42ம் வசனம் இரு தனித்தனிக் கட்டளைகளைக் கொண்டுள்ளதாகச் சிலர் நம்புகின்றனர், ஆனால் இங்கு அவைகள், ஒரே கட்டளையின் இரு சொல்விளக்கங்கள் என்ற வகையில் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன.* [25]Lloyd-Jones, 167. [26]*ஒரு சந்தர்ப்பத்தில் ஒரு மனிதர், தமது பரம்பரை உடைமைகளைப் பெறுவதற்கு உதவும்படி இயேசுவிடம் கேட்டார். அம்மனிதரின் வேண்டுகோளை இயேசு நிறைவேற்றவில்லை. அதற்குப்பதிலாக அவர், அம்மனிதருக்கு உண்மையில் தேவையானதைக் கொடுத்தார்: பேராசையின் அபாயங்கள் பற்றிய போதனை (காண்க லூக்கா 12:13-21).* [27]Carson, *157. இந்தக் கூற்றைக்கூறியதில் கோர்சன் அவர்கள் இயேசுவின் நான்கு உதாரணங்களையும் தமது மனதில் கொண்டிருந்தார்.* [28]*இருப்பினும் பின்வரும் பழங்கூற்றை மனதில் கொள்ளுங்கள்: "உதவி தேவைப்படுகிற ஒருவருக்கு உதவத்*

*தவறுவதைப் பார்க்கிலும் உதவி தேவைப்படாத பத்து மனிதர்களுக்கு உதவுவது சிறந்தது.”* [29]*யாரே ஒருவர், “உங்கள் உடைமைகள் யாவற்றையும் இலேசான பிடிமானத்துடன் பற்றிக்கொண்டிருங்கள்” என்று கூறியுள்ளார்.* [30]Adapted from Lloyd-Jones, 171-74.